14-50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 401,88,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

9. அரசினர் தீர்மானம்

பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப் பெற்று, 2—5—1990 அன்று மீண்டும் கூடுவது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''பேரவை விதி 25 (1) இன்படி பேரவை இன்று ஒத்தி வைக்கப் பெற்று மீண்டும் 2-5-1990 புதன்கிழமை அன்று கூடும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2-5-1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-51 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

77. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ பேரவை முன் வைக்கப் பெற்றது.)